Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 03.08.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 03.08.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக பங்கேற்றுத் திரும்பியுள்ள இந்திய விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உச்சநீதிமன்றத்தில், நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான மசோதா, இன்று மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.

உடல் உறுப்பு தானம் தொடர்பான உறுதிமொழி இணையதளத்தில், இதுவரை, 5 லட்சம் உடல் உறுப்பு தானங்களுக்கு, ஆதார் அடிப்படையில், பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் UPI மூலமான பணப் பரிமாற்றங்களின் எண்ணிக்கை கடந்த ஜூலை மாதத்தில், 23.66 பில்லியனாக அதிகரித்து உள்ளது.

*காமன்வெல்த் -1 (4)*

கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக பங்கேற்றுத் திரும்பியுள்ள இந்திய விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*காமன்வெல்த் -2 (17)*

(வாய்ஸ்)

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், 13 தங்கம் உள்பட இந்தியாவிற்கு கிடைத்துள்ள 39 பதக்கங்களில், 9 தங்கப் பதக்கங்களை மகளிர் வென்றுள்ளதை, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, சமூக ஊடகத்தில் சுட்டிக் காட்டி பாராட்டி உள்ளார். இந்திய விளையாட்டு வீரர் - வீராங்கனைகளின் அபாரத் திறமையும், மன உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் கடும் உழைப்பும் இளைஞர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று சமூக ஊடகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதற்கிடையே புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டு, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் பளுதூக்கும் பிரிவுகளில் 1 தங்கம், 6

வெள்ளி உள்பட 11 பதக்கங்களை வென்று திரும்பி உள்ள இந்திய வீரர் – வீராங்கனைகளை, ரொக்கப் பரிசு வழங்கி, பாராட்டினார். சாதனை படைத்த வீரர் – வீராங்கனைகள், விளையாட்டுத் துறையின் தூதர்களாக செயல்பட வேண்டும் என்றும், பள்ளி – கல்லூரிகளுக்கு இவர்கள் சென்று மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

***மக்களவை மசோதா -1 (18)***

உச்சநீதிமன்றத்தில், நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான மசோதா, இன்று மக்களவையில் நிறைவேற்றப் பட்டது. உச்சநீதிமன்றத்தில், தலைமை நீதிபதி அல்லாத, இதர நீதிபதிகளின் எண்ணிக்கையை, 33-இல் இருந்து, 37-ஆக உயர்த்தி, இவ்வாண்டு மே மாதம் குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசர சட்டத்திற்கு மாற்றாக இம்மசோதா நிறைவேற்றப் பட்டுள்ளது. மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், மசோதாவை அவையில் கொண்டுவந்து பேசுகையில், நீதித்துறையில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கான அரசின் நடவடிக்கைகளில் முக்கிய படியாக இம்மசோதா திகழ்வதாக கூறினார்.

இதற்கிடையே, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிடம் இருந்து மத்திய பொதுத் துறை நிறுவனங்களால் வாங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் வழங்குவதில் தாமதங்களை

தவிர்ப்பதற்கான மசோதா, இன்று மாநிலங்களவையில் நிறைவேற்றப் பட்டது. இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜிதன் ராம் மாஞ்சி, மசோதா மீதான விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசுகையில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்களின் அளவும், இத்தகைய கடன்களுக்கு அரசு வழங்கும் உத்தரவாதத்தின் அளவும் தொடர்ந்து அதிகரித்து வருவதாகத் தெரிவித்தார்.

***மக்களவை மசோதா -2 (5)***

மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டதைத் தொடந்து, இரு அவைகளும் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக, டெல்லி மாணவர் போராட்டத்தின் போது, போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து, எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், மக்களவை இரு முறையும், மாநிலங்களவை ஒரு முறையும், ஒத்தி வைக்கப்பட்டன.

***முர்மு – சிலை (7)***

விடுதலைப் போராட்ட வீரரும், சமாஜா ஒடியா நாளேட்டின் நிறுவனருமான, உத்கல்மணி பண்டிட் கோப பந்து தாஸின் திருவுருவச் சிலையை இன்று புதுடெல்லியில் குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு திறந்து வைத்தார். கவிஞர், பத்திரிக்கையாளர் மற்றும் விடுதலை

போராட்ட வீரர் என்ற முறையில், ஒடிசா மக்களுக்கு கோப பந்து தாஸ் ஆற்றியுள்ள சேவை அளப்பரியது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. அபராஜிதா சாரங்கி, ஆகாஷ்வாணி செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

***உஸ்பெகிஸ்தான் (17)***

உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. சைடோவ் ஓடிலோவிச், புதுடெல்லி, குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார். இந்தியாவிற்கும் – உஸ்பெகிஸ்தானுக்கும் இடையே, வரலாறு, நாகரிகம் மற்றும் கலாச்சார ரீதியில் ஆழமான பிணைப்புகள் இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார். இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புள்ள புதிய துறைகளை இனம் காண, உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சரின் இந்தியப் பயணம் உதவிகரமாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, இந்தியா – உஸ்பெகிஸ்தான் வர்த்தக பேரவைக் கூட்டத்தில், மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், உஸ்பெகிஸ்தான் தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. லாசிஸ் குத்ரடோவ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தியாவிற்கும் – உஸ்பெகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளில் தற்போது புதிய உத்வேகம் பிறந்து இருப்பதாகவும், அடுத்த 3 ஆண்டுகளில், கூடுதல் மூலதனம், குறைவான வர்த்தகத் தடைகள், மற்றும்

கூடுதல் ஒத்துழைப்பு மூலம் இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்க முடியும் என்றும், திரு. பியூஷ் கோயல் கூறினார்.

***முர்மு கடல் சாகசம் (8)***

இந்திய ராணுவத்தின் திரிவேணி பாய்மரக் கப்பல் மூலம், உலகைச் சுற்றி கடல் சாகச பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள முப்படை மகளிர் குழுவினர், இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்தனர். சமுத்திர பிரதட்சிணா என்ற பெயரில், கடினமான கடல் பகுதிகள் வழியாக, 25 ஆயிரம் கடல் மைல் அளவிற்கு இக்குழுவினர் மேற்கொண்ட பயணம், இந்திய இளைஞர்கள் குறிப்பாக, பெண்களுக்கு பெரிய அளவில் ஊக்கமளிக்கும் என்று, குடியரசுத் தலைவர் கூறினார்.

***உறுப்பு தானம் -1 (7)***

உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வருபவர்களுக்கான உறுதிமொழி இணையதளம், கடந்த 2023ஆம் ஆண்டு தொடக்கப் பட்டத்தில் இருந்து, இதுவரை, 5 லட்சம் உடல் உறுப்புகளை தானமாகப் பெற, ஆதார் அடிப்படையில், பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய உடல் உறுப்பு நன்கொடை தினமான இன்று, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில், மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா படேல் இதைத் தெரிவித்தார். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

***உறுப்பு தானம் - 2 (15)***

(வாய்ஸ்)

கடந்த 12 ஆண்டுகளில், நாட்டில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை, ஆண்டுக்கு 20 ஆயிரத்தைத் தாண்டி அதிகரித்து இருப்பதாகவும், இதில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 3ஆவது இடத்தில் இருப்பதாகவும், அமைச்சர் திருமதி. அனுப்பிரியா படேல் கூறினார். இத்தகைய அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி பெற்ற மனிதவளத்தை மேம்படுத்த, அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக, அவர் தெரிவித்தார். உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்க, மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் அவர் சுட்டிக் காட்டினார். உடல் உறுப்பு தானம் மற்றும் அறுவை சிகிச்சைக்கு ஏற்ற சூழல் ஒன்றை உருவாக்குவதற்கான இ-பிரத்யாரோபண் இணைய தளத்தையும், நன்கொடையாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை கவுரவிக்கும் வகையில், ஓராண்டு காலம் தேசிய அளவில் நடைபெற உள்ள, யுகம் – யுகமாய் வாழ்வோம் இயக்கத்தையும், நிகழ்ச்சியின் போது அமைச்சர் தொடக்கி வைத்தார்.

***UPI (11)***

நாட்டில் UPI மூலமான பணப் பரிமாற்றங்களின் எண்ணிக்கை கடந்த ஜூலை மாதத்தில், 23.66 பில்லியனாக அதிகரித்து உள்ளது. UPI

மூலமான பணப் பரிமாற்றங்களின் மொத்த மதிப்பும், இதுவரை இல்லாத அளவில், 29.88 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது. நாட்டின் 2ஆம் நிலை – 3ஆம் நிலை நகரங்கள், கிராமப் புறங்களிலும், UPI பயன்பாடு அதிகரித்து வருவதற்கு, இதுவே சான்றாகும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. நாட்டில் கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட UPI சேவைகள், சாதாரண டிஜிட்டல் பரிசோதனை என்ற நிலையில் இருந்து, தற்போது, உலகின் மிகப் பெரிய நிகழ்நேர பணப்பரிமாற்ற வசதியாக மேம்பட்டு இருப்பதும், இதனால், நாட்டு மக்கள் அனைவரும் முறையான நிதிக் கட்டமைப்பில் ஒருங்கிணைக்கப் பட்டு, தடையற்ற வர்த்தகம் உறுதியாகி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

### ஆடிப் பெருக்கு *(7)*

ஆடி மாதம் 18ஆம் தேதியான இன்று, ஆடிப் பெருக்கு விழா, தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப் பட்டது. குறிப்பாக காவிரி உள்ளிட்ட ஆற்றங்கரைப் பகுதிகளில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆற்றங்கரையில் கூடி, சிறப்பு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். புது மணப்பெண்கள், புதிய மஞ்கள் சரடு மாற்றிக் கொண்டனர். ஆடிப் பெருக்கு நாளில் செய்யும் பூஜைகளும், தான-தர்மம் உள்ளிட்ட நற்காரியங்களும் பல மடங்கு பெருகி பலனளிக்கும் என்பது ஐதீகமாகும்.

***தமிழ்நாடு விபத்து (5)***

மதுரை அருகே மேலூரில் இன்று காலை ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார், எதிர் திசையில் வந்த வாகனம் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், 1 குழந்தை உட்பட, ஐவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். மேலும் போலீசார் விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

***ஏனாம் (10)***

ஏனாமில், பிரான்ஸ்திப்பா உள்ளிட்ட கோதாவரி கரையோரப் பகுதிகளில், வெள்ளம் இன்று படிப்படியாக குறைந்துள்ளது. ஏனாம் GMC பாலயோகி பாலத்தின் அடியில், நீர் மட்டம் 3 மீட்டரில் இருந்து 2 மீட்டராக குறைந்துள்ளது. மண்டல நிர்வாக அதிகாரி திரு. சிவராஜ் மீனா, இன்று, ராஜீவ் பீச் உள்ளிட்ட இடங்களுக்கு நேரில் சென்று நிலவரங்களை பார்வையிட்டார். இதற்கிடையே, தௌலேஸ்வரம் அணையிலிருந்து, வங்கக் கடலுக்கு வெளியேற்றப்படும் நீரின் அளவு இன்று, விநாடிக்கு 10.2 லட்சம் கனஅடியாக குறைந்ததைத் தொடர்ந்து, கோதாவரி கரையோரப் பகுதிகளுக்கு, ஆந்திர அதிகாரிகள் விடுத்திருந்த முதல்கட்ட வெள்ள எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளது.

***வானிலை (14)***

இன்று கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட

மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரியில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் டெல்டா மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 9ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக தென்காசி மாவட்டம் குண்டாறு அணையில், 10 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில், 1 செ.மீ மழை பெய்துள்ளது.

***போலி வீடியோ (6)***

டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டங்கள் மீண்டும் தொடங்கி இருப்பது போல, சமூக ஊடகங்களில் வலம் வரும் வீடியோ போலியானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. பழைய வீடியோவை புது வீடியோ போல் காட்டி மக்களை திசைத் திருப்புவதே இதன் நோக்கம் என்பதால், மக்கள் இத்தகைய போலித் தகவல்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என, பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

*நிலக்கரி (9)*

நாட்டின் நிலக்கரி உற்பத்தி கடந்த ஜூலை மாதத்தில், 14.78 மில்லியன் டன்னாக, வருடாந்திர அடிப்படையில், 9.6 சதவிகிதம் அதிகரித்து உள்ளது. நிலக்கரி சுரங்கங்களில் இருந்து, தேவையுள்ள இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் நிலக்கரியின் அளவும், 17.49 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இந்திய நிலக்கரி சுரங்கங்களின் செயல்பாட்டுத் திறன், தொடர்ந்து அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்று, மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனால், நிலக்கரித் தேவைகளுக்கு இறக்குமதியை நம்பியுள்ள நிலையை மாற்றவும், சுயசார்பு இலக்கை நோக்கிய பயணத்தில் முன்னேறவும், ஏதுவாகும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக பங்கேற்றுத் திரும்பியுள்ள இந்திய விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உச்சநீதிமன்றத்தில், நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான மசோதா, இன்று மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.

உடல் உறுப்பு தானம் தொடர்பான உறுதிமொழி இணையதளத்தில், இதுவரை, 5 லட்சம் உடல் உறுப்பு தானங்களுக்கு, ஆதார் அடிப்படையில், பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் UPI மூலமான  பணப் பரிமாற்றங்களின் எண்ணிக்கை கடந்த ஜூலை மாதத்தில், 23.66 பில்லியனாக அதிகரித்து உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.  RSS / KR / RK